# ஏன் வேண்டும் ஈழத்தமிழ்நாடு?

"கொக்குவில் முதலி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வாழ்க.

# ஏன் வேண்டும் ஈழத் தமிழ் நாடு?

"கொக்குவில் முதலி"

அண்ணா பதிப்பகம்

கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பதிப்பு வைகாசி 1970.

(உரிமை உடையது)

விலை -35 சதம்

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்...

தமிழ் மத்தியிலே இருந்த மூட நம்பிக்கைகளை நீக்க உழைத்தவரும், தமிழ் உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணை அற்ற தமிழ்த் தலைவரும், பாரதத் தமிழ் நாட்டு முதலமைச்சராய் இருந்து மீளாத் துயிலில் மூழ்கிவிட்ட பேரறிவுப் பெருஞ்சுடர் அறிஞர் அண்ணாவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பகத்தார் வார்த்தை

அதிகமான தமிழ் அரசியல் கட்சிகள் தமது உரிமைகள் பாராளுமன்ற முறை மூலம் தீர்க்கப்படாது விட்டால் தனிநாடு அமைப்பதே சாலச் சிறந்தது என்றனர்.

ஆகவே, ஈழத் தமிழ் நாடு வேண்டுமா? ஏன் வேண்டும்? ஈழத் தமிழ் நாடு பிரிந்தால் வாழமுடியுமா? என்ற வினுவிற்குப் பதில் களை விளக்கியுள்ளார்.

ஆதலினுல் இந் நூலை நீங்கள் எல்லோ ரும் தவருது வாசித்து நன்மை அடைவீர் களாக.

கொக்குவில். அண்ணு பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பேறு

"இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்—
துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை உண்டாகிடும், வீரம் வரும்."

—பாரதிதாசன்.

"தமிழென்று தருகின்ற தனியந்தப் பெயரில்
அமிழ்தென்று வருகின்ற அதுவந்து சேரும்
நமதிந்தப் பெயர்கொண்ட மொழியென்ற எண்ணம்
தமிழர்க்குப் புகழ்மிக்கத் தருமென்றல் திண்ணம்."

—நாமக்கல், வெ. இராமலிங்கனார்.

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்."

—பாரதியார்.

தமிழ் நம் ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்து விட்ட மொழி! நாம்தான் அதை மறந்திருந்தோமே தவிர, தமிழ் நம்மை மறக்கவில்லை.

—அறிஞர் அண்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகமெலாம் தமிழ் ஓங்குக!"

# ஏன் வேண்டும்
# ஈழத் தமிழ் நாடு?

## 1

நாம் பிறந்தது ஏன்? நாம் பிறந்தது வாழ; தன் மானத்துடன் வாழ. அதுவும் தரங்குன்ற வாழ்வு வாழ வேண்டும் என்ற பண்பிலே தான் பிறந்தோம்.

ஆனல் இன்று அப்படியாக நாம் நம் நாட்டில் வாழ முடிகிறதா என்று பார்த்தால் 'இல்லை! இல்லை!! இல்லை!!! என்று தான் தெரிகிறது வெட்ட வெளிச்சமாக.

தமிழர்களே! நன்றுகச் சிந்தியுங்கள். சீர் பெறுங்கள். அதுவே தான் உங்கள் கடமை.

ஈழம் சுதந்திரமடைந்து எத்தனை ஆண்டுகள் என்பதனை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

இலங்கையை வெள்ளையன் ஆண்டபோது நம் நாடு எப்படிப்பட்ட நிலையில் இருந்ததென அறிவீர்கள். என்றுலும் சிலவற்றைத் தருகிறேம்; வெள்ளையன் ஆட்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி, நேர்மை, கண்ணியம் இருந்தன, திறமைக்கேற்ற தொழிலும் உழைப்புக்கேற்ற ஊதியமும் சகல உணவுப் பொருட்களும் இருந்தன. அத்தோடு வேலையில்லாத் திண் டாட்டத்தின் நிழல் கூட எட்டிப்பார்க்காமல் இருந்தது.

ஆனல் இன்றே திறமைக்கேற்ற தொழில் இல்லை: உழைப்புக்குத் தகுந்த ஊதியம் இல்லை. ஊதியத்தில் பாகு பாடு. எதிலும் தமிழர் மிதிக்கப்படுகின்றனர்.

தமிழராகிய நாம் அடிமைப் பட்டல்லவா வாழ்கிறேம்! தொழில் உண்டா? பாடுபட்டு உழைக்கும் தமிழ் அரசாங்க உத்தியோகஸ்தருக்கு சம்பளக் குறைவு. சிந்தித்துப் பாருங் கள் தமிழர்களே!

இவைதானு, இத்தோடு போகட்டும் என்று விட மற் றும் நமது உயிரிட்ட அடிப்படை உரிமையான நிலங்கள் சிங்களக் குடியேற்றத்தால் பறிக்கப்படுகிறது. திருகோண மலை, வவுனியா என்ற தமிழர் பிரதேசங்கள் பறிபோகி றது. அம்பாறை மாவட்டமே பறிபோய் விட்டது.

இதனை விட எமது [1]அரசாங்க வெளியீட்டுத் திணைக் களகம் தனது வெளியீட்டிலே "கோணமலை, ஊர்காவற் றுறை" என்ற ஊர்களின் பெயர்களுக்குப் பதிலாக சிங்க ளப் பெயர்களைச் சூட்டி ஊர்ப் பெயர் மாற்றம் செய்யும் சதிவேலை செய்கிறது. அத்தோடு சிங்களத்தை மறைமுக மாகத் திணிக்கிறர்கள். இங்கே நமக்கு வாழ்வில்லை; எந் தச் சுதந்திரமும் இல்லை.

---

1. 1-2-70 ஆம் தேதி விடுதலை —ஆதாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் திரியும் நாய்களுக்கு அடையாளப் பட்டி கட்டப்படும். அது இல்லாத நாய்களை உள்ளூர் ஆட்சி மன்றம் பிடித்து சுட்டுக் கொல்லப்படும். அல்லது கடலில் தள்ளப்படும். அதுபோல நாமும் (2)அடையாள அட்டையை எம்முடன் எங்கும் எடுத்துச்செல்லவேண்டும். தொலைந்துவிட்டால் நாம் நாடற்றவர்களாக அதாவது கள்ளத்தோணியர்களாகக் கணிக்கப்படுவோம். இதை மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது, நாம் மானத்தோடு வாழ வழியுமில்லை.

நாம் நம்மை ஆளவில்லை. ஜனநாயகம் என்ற போர்வையின் கீழ்ப் பெரும்பான்மை பாராளுமன்றப் பலத்தை உபயோகித்து பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனமான தமிழினத்தை அடக்கி அடிமையாக்கி வாழ்கிறது.

ஆனால் ஐக்கியம், தேசியம் இவைபற்றி பல தலைவர்கள் தொண்டை வலிக்க வலிக்க மேடைகளிலும், பத்திரிகைகள் மூலமாகவும் அறிக்கைகள் விட்டுக்கொண்டும் விட்டும் இருக்கிறார்கள். ஆனால் செயலளவில் ஒன்றையும் காணோம்.

தமிழன் தமிழ் மொழியைக் கற்று ஈழத்திலே வாழ முடியவில்லை. தமிழன் ஆங்கிலம் கற்று அரசாங்க ஊழியர்களாகச் சேர்ந்தவர்களும் சிங்களம் படிக்காததினால் உத்தியோகம் பறிக்கப்படுகிறது. இது ஜனநாயகமா? அல்லது ஐக்கிய தேசியமா? அட கடவுளே! தமிழனுக்கும் தமிழிற்கும் இலங்கையிலே இடமே இல்லையே. காரணம் ஈழத்தைத் தன்மானமுள்ள தமிழன் ஆளவில்லை, ஜனநாயகமும் அற்றுப்போய் விட்டது, ஆனால் ஜனநாயகம் தொண்டைக்குமேல் பேசும் வகுப்புவாதச் சிங்களவர் அல்லவா ஆள்

2. அடையாள அட்டை என்பது எமது புகைப்படம் அத்தோடு நமது தோற்றம் பற்றிய விளக்கம் இருக்கும் ஒரு அட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள்; எச்சில் பதவிக்காக ஒரு இன வழி வந்த மொழியைக் கெடுக்கவந்த துரோகிகள் அல்லவா நாட்டை ஆள்கிறார்கள்.

நமக்கென்று ஒரு பழம் பெரும் மொழியிருக்க நாம் ஏன் அன்னிய மொழிக்கும் அன்னியனுக்கும் அடிமைப்பட்டு வாழவேண்டும்?

நாம் சுதந்திரமாய் வாழ, தமிழைப் பாதுகாக்க, தமிழின் பெருமையை உலகத்தவர்க்கு உணர்த்த சகல உரிமையுடனும் தமிழன் வாழவேதான் நாம் ஈழத் தமிழ் நாடு கேட்கிறோம்.

தமிழினமே ஒன்று சேருங்கள் கொத்தடிமை தகர்க்க போர்க்கொடி உயர்த்துங்கள்!

## 2

எமது பகுதி இயற்கை வளத்தில் அதாவது நீர்வளம், நிலவளத்தில் குறைந்ததல்ல. ஆனாலும் பொருளாதாரத்தினை ஆட்சியாளர் படுதாளத்திற்குத் தள்ளி வீழ்த்தியுள்ளனர். மட்டக்களப்பை எடுத்துக்கொண்டால் அங்கே நீர் வளம் உண்டு. அங்கே அதிகவளவு நெல் பயிரிடப்படுகிறது. பயிற்செய்கைக்குத் தேவையான நீரைத் தேக்கி வைப்பதற்கு கிளிநொச்சியிலே இரணைமடுக் குளமும், மன்னாரில் கட்டுக்கரைக் குளமும் மற்றும் சிறுசிறு குளங்களும் உண்டு. தேவைக்கு ஏற்றபடி மழை நீரை தேக்கி வைத்து பயன் பெறலாம். தமிழ்ப்பகுதிகளில் தண்ணீருக்காக வானம் பார்க்கத் தேவையில்லை. ஏனெனில் எமது நிலத்தின்கீழ் சிறிது தூரத்திற்கு கீழ் நன்னீர் ஊற்றுக்கள் உண்டு இப்படி நீரைப் பெறுவதினால்தான் யாழ்ப்பாணத்தில் வருடம் முழுவதும் தோட்டப் பயிர் செய்ய முடிகிறது. ஆகவே எமது பகுதிகள் நீர் வளம் நில வளம் அற்றது அல்ல எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்குத் தேவையான வெண்காயம் முதலிய உப உணவுப் பொருட்களை யாழ்ப்பாணம் பயிரிடுகிறது. தமிழ் நாட்டின் கற்பகதரு என்று அழைக் கப்படும் பனைச் செல்வமும் உண்டு. மற்றும் எமது தட்ப வெட்ப சுவாத்திய நிலைக்கேற்ற பயிர்களான பருத்தி, சணல் போன்றவைகளைப் பயிரிடலாம், இதனால் எமது சுயதேவையாவது பூர்த்தி செய்யப்படுகிறது.

வவுனியாவில் காரீயம் உண்டு. பருத்தித்துறையைச் சார்ந்த பகுதிகளில் கண்ணாடிப்படிவ மண் இருக்கிறது; புல்மோட்டையிலே இல்மனைட் இருக்கிறது. மன்னாரையும் ஊர்காவற்றுறையையும் சேர்ந்த பகுதிகளிலும் பெற்றோலியம் நிலத்திற்கடியில் கிடப்பதாக மண்வள ஆராய்ச்சி ஆளர்கள் அறிக்கை கூறுகிறது எனத் தெரிகிறது. இந்தப் பெற்றோலியம் மட்டும் கிடைத்துவிட்டால் நம்நாடு ஒரு செல்வம் செழித்த நாடாகிவிடும்; இதனால் எமது நாடு பொருளாதாரத்தில் திடீர் மின்னல்வளர்ச்சி ஏற்படுத்தும்

மற்றும் கடல்படு திரவியங்களைப் பொறுத்தவரையிலும் மீன் போன்றவையும் [3]எமது பகுதிகளில்தான் அதிகம். அதனால் வருமானம் அதிகம் உண்டு;

துறைமுகங்களை எடுத்துக்கொண்டாலும் திருகோணமலை ஒரு இயற்கைத் துறைமுகமாக இருக்கிறது, மற்றும் காங்கேசன்துறை துறைமுகம், ஊர்காவற்றுறைத் துறைமுகம் முதலியனவும் உண்டு

சீமெந்துத் தொழிற்சாலையைப் பொறுத்த மட்டில் தமிழ்ப் பகுதிக்கு நஷ்டம் ஆனால் காங்கேசன்துறைத் தொழிற்சாலையினால் அல்ல. மற்றும் புத்தளம், காலி ஆகியவற்றினால்தான்.

---

3. இலங்கையிலேயே பெரிய மீன் பிடித்திடல் மன்னார் கடலிலே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனென்றால் கல், கிளிங்கர் இங்கிருந்து போகிறது. அங்கே அரைக்கப்படுகிறது. காலி, புத்தளத்திற்கு கல் மற்றும் பொருட்கள் ஏற்றுவதற்கு தேவைப்படும் பணத்தினால் அரசினருக்கு நஷ்டம். அதே வேளையில் காலி, புத்தளத்தில் இயங்கும் தொழிற்சாலைகளை காங்கேசன்துறையில் விரிவு படுத்தினால் அனேக தமிழருக்கு வேலை வழங்கலாம். அத்தோடு ஏற்றுமதிச் செலவும் மிச்சப்படுத்தப் படலாம்.

எமக்கு இன்றியமையாத மின்சாரத்தை எங்கிருந்து பெறுவீர்கள் என்று சிலர் கேட்கலாம். இவ்வளவு நாட்களும் பெற்றது போல அனல் மின் நிலையங்களில் (சுன்னாகத்தில் இருப்பது போன்ற மின்சார நிலையம்) இருந்து பெறலாம்,

கடதாசித் தொழிற்சாலைக்குத் தேவையான (4)மூலப் பொருட்களுக்கும் சிங்களப் பகுதியை நம்பியிருக்கத் தேவையில்லை.

எமது பகுதியில் உள்ள தொழில் பற்றுக்குறையைப் போக்க, பொருளாதார நிலமையை உயர்த்தவேதான் ஈழத் தமிழ் நாடு கேட்கிறோம்.

கிளர்ந்தெழுங்கள் தனிநாடு பெறுவதற்கு! தமிழன் உரிமையுடன் வாழ்வதற்கு!!.

## 3

பூகோள ஒற்றுமை, இன ஒற்றுமை, மொழி ஒற்றுமை பொதுவான கலை, கலாச்சார ஒற்றுமை, பொதுப் பொருளாதாரப் பிணைப்பு, அன்னியர் தங்களை அடிமைப்படுத்து

---

4. மூலப்பொருள்—வைக்கோல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதால் உண்டாகும் ஒற்றுமை என்பன ஏழும் ஒரு தேசிய இனத்தின் பெரும்பான்மைக் குணங்கள் இவற்றில் ஏதே னும் சிலமட்டும் வலுவாக இருந்தாலே அவ்வினம் ஒரு தேசியவினமாகும்.

பூகோள ஒற்றுமை: இதனைப் பொறுத்த வரையில் அதிகம் வேற்றுமை இல்லாவிட்டாலும் சில குறிப்பிடத்தக்கன: தென்இலங்கையிலே மலைகளும், ஆறுகளும் உண்டு, வடக்கு கிழக்கு இலங்கையிலே மலையும் இல்லை, ஆறுகளும் இல்லை, என்றே சொல்லாம். சமதரைதான் உண்டு. இதிலே ஒற் றுமை இல்லை.

இன ஒற்றுமை: இதனைத்தான் அனேகதலைவர்கள் கூட்டங் களிலும் பத்திரிகைகளிலும் வாய்வலிக்க,கைவலிக்க அறிக் கைகளிலும் தேசியம், ஐக்கியம் சொல்கிறுர்கள். ஆனல் செயலில் ஒன்றையும் காணேம். சிங்களவர்கள் (8)ஆரிய இனம். தமிழர்களாகிய நாம் திராவிடஇனம் ஆகவே இதிலும் ஒற்றுமை இல்லை

கலை கலாச்சாரம்: இதனை எடுத்தாலும் தமிழருடைய கலை கலாச்சாரம் சிங்களவருடைய கலாச்சாரத்தில் இருந்து அதிக வேறுபாடுடையது.

மொழி: நாங்கள் பேசுவதோ தமிழ்; இனத்தால் திராவி டர். கலை கலாச்சாரத்தால் திராவிடர். சிங்களவர் பேசு வதோ சிங்களம். இனத்தால் கலை கலாச்சாரத்தால் நம் மில் இருந்து வேறுபட்டவர்கள். இதிலேயும் ஒற்றுமை இல்லை.

மதம்: தமிழர்களைப் பொறுத்தவரை இந்துக்களும், முஸ் லீம்களும் தான். ஆனல் சிங்களவர் மதத்தால் பௌத்தர் கள். மதத்திலும் ஒற்றுமை இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரப் பிணைப்பு: பொதுவாகப் பொருளாதாரப் பிணைப்பு இருந்தால் தான் ஒரு தேசிய இனம் என்பதில்லை. பொதுவாகப் பொருளாதார ஒற்றுமை இருந்தால்தான் தேசிய இனங்களிடையே ஒற்றுமை வலுவடையும்,

இதனை எடுத்து ஆராயும் போது பார்த்தால் தெரியும் தமிழர் பகுதியிற்கும் சிங்களவர் வாழும் பிரதேசத்திற்கும் பிணைப்பு எதுவிதத்திலும் இல்லை.

சிங்களப் பகுதிகளிலே பெரிய தொழிற்சாலைகளைக் காணலாம். இன்றும் அமைத்து வருகின்றனர். ஆட்சியாளர்கள் தமிழர் வாழும் பகுதியில் தொழிற்சாலைகள் அமைப்பதைப் புறக்கணித்து வருகின்றனர். தொழிற்சாலைகள் இல்லை என்றே சொல்லலாம். இதிலும் சிங்களப்பகுதிக்கும் தமிழ்ப்பகுதிக்கும் எவ்வித பிணைப்பும் இல்லை.

அன்னியர் தங்களை அடிமைப்படுத்துவதால் உண்டாகும் ஒற்றுமை: இதுதான் தேசிய இனங்களைத் தனித்து வாழத் தூண்டிய தூண்டி நிற்கும் மாபெரும் சக்தியாகும்.

ஆங்கிலேயரின் ஆதிக்கம் அதிகரித்த போதுதான் அயர்லாந்தில் தேசிய உணர்ச்சி கொடிகட்டிப் பறந்தது. இதனைப்போலவே சிங்களவர் ஆதிக்க உணர்ச்சி அதிகரிக்க அதிகரிக்கத்தான் தமிழர் தேசிய உணர்ச்சியும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் வேளை வருகிறது என்பதில் நம்பிக்கை உண்டு. அதுவும் மிக அண்மையில்தான்.

அடுத்தபடியாக சரித்திரத்தையே எடுத்துப் பார்த்தாலும் இலங்கையானது, யாழ்ப்பாணம், இராசரட்டை, மாயரட்டை, உருகுணைரட்டை என நான்கு பகுதிகளாகவே இருந்ததே ஒழிய ஒன்றுபட்டுக் கிடந்ததாகக் கூறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அல்லது நாளை அல்லது நாளை மறுநாள் விழிப் புணர்ச்சி தமிழர் மத்தியில் பரவித் தனித் தமிழ்நாடு கோருவார்கள்.

தமிழ் தேசிய இனம் மானத்துடன் வாழ தனி நாடு பெறச் சீறி எழுங்கள்:

# 4

சீன தேசத்தின் அரசியல் மேதை கலாநிதி சன்யாட் சென் (Dr. Sunyatsen) [5]சர்வ தேசியம் என்பது தேசியத்தி லிருந்துதான் முளைத்தெழுகிறது. சர்வ தேசிய கொள்கை களைப் பரப்ப வேண்டும் என்றால் முதலிலே நாம் தேசியத் தைப் பலமான முறையிலே வேரூன்றுவதற்கு ஏற்றவாறு நிலையை ஏற்படுத்த வேண்டும், ஏற்படுத்தாது விட்டால் சர்வதேசியம் நன்றாகத் தளைக்க முடியாது என்றார்.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால் தேசியத்தின் பின்பு தான் சர்வதேசியம் உதயமாக முடியும்.

இதற்கு மேலும் கூறவேண்டும் என்றால் தேசியம் என் பது அஸ்திவாரம். சர்வதேசியம் என்பது அதன்மேல் கட் டப்பட்ட கோபுரமாகும்.

இந்தியாவின் பழைய பிரதமர் பண்டிதர் நேரு அக மது நகரிலே உள்ள கோட்டையிலே அரசியல் சிறைக் கைதியாக இருந்த போது [6]ஒரு நூல் எழுதினார். அதிலே "நவீன விஞ்ஞான முன்னேற்றம், சர்வ தேசியம் பற்றிய

---

5. The three principles of the people என்ற நூலில் கலாநிதி சன் யாட்சென் குறிப்பிட்டிருக்கிறார்.

6. The Discovery of India என்ற நூலில் பண்டிதர் நேரு கூறியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுக்கள் இருந்து வந்தாலும்கூட நிற பேதம், மற்றை யோரைப் பிரித்து வைக்கும் செயல்களும் வரலாற்றிலே முன் எக்காலத்திலும் காணப்படாதது போலவே இப் பேதுா காணப்படா விடினும் அந்த அளவிலாவது காணப் படுகின்றன என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்ற உண்மையாகும்''

கூடுதலான சனத்தொகை கொண்ட பகுதியாகிய சிங் களப்பகுதியினர் தமிழ்ப் பகுதியாளர்கள் மேல் ஒற்றுமை யைத் திணித்தால் அல்லது திணிப்பதற்கு முயற்சிக்குமே யானுல் அதன் விளைவு பெரும் அழிவு தரக்கூடிய பயங்கர மானதாகவே இருக்கும். இதே போலத்தான் மொழித் திணிப்பும் இருக்கும் என்பதனை எச்சரிக்கையுடன் தெரிவிக் கிறேம்.

விடுதலை வீரன் மாஜீனி (Mazzini) 1859-ம் ஆண்டில் அடிமைப்பட்ட இத்தாலிய மக்களைப் பார்த்து ''ஏ, அடி மைத்தனத்தில் ஆட்பட்டு இன்னும் முணு முணுத்துக் கொண்டிருக் கொண்டிருக்கும் இத்தாலியனே ஏற்கனவே விடுதலை பெற்றிருக்கும் வேறு நாட்டவர்கள் என் முன் வந்து இங்குள்ள கொடுங்கோலர்களை விரட்டியடிக்கக் கூடாதென்று நினைக்காதே! நீ வீறு கொண்டெழுந்தால் அவர்கள் வருவார்கள், பிற்பாடு எல்லோருமகாச் சேர்ந்து உமது எசமானுர்களை விரட்டியடிக்கலாம்; வேறு ஓர் சந் தர்ப்பத்திலே ,மாஜினி கூறுகிருர் எழுங்கள்! எழுங்கள்!! இன்றே எழுங்கள், இல்லையேல்; நாளை தடைகள் அதிக மாகும்'' என்று;

ஆகவே நாம் விரைவில் தனிநாடு கோரி கிளர்ந்தெழு தல் வேண்டும். இல்லாவிட்டால் வரவர தடைகள் அதிக மாகும். அத்தோடு நாம் கிளர்ந்தெழுந்தால் அகில உலகத் தவர்கள் கவனமும் நம்பக்கம் திரும்பும், அவர்களுக்குப் பதில் சொல்வதற்காகிலும் அவர்களுடைய நல்லெண்ணத் திற்குப் பயந்தாவது சிங்களவர்கள் (சிங்களத்தலைவர்கள்) விடுதலை வழங்கத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களிடத்திலே உதயமாகி விட்டான் தனி நாட்டுச் செங்கதிரோன். சீறி எழுங்கள் அடிமை விலங்கை உடைத்தெறிவதற்கு.

## 5

''ஜெய் லங்கா'' பாடும் தலைவர்கள் முதல் கடைசிப் படித் தொண்டர்கள் வரை நம்மை நோக்கி எழுப்பிக் கொண்டிருக்கும் புதிர் என்ன தெரியுமா?

அதுதான், ''ஐக்கிய இலங்கை'' ''தேசிய இலங்கை'' புதிய பெயரைச் சூட்டி வடக்கு, கிழக்கு இலங்கையில் விழுவிட்ட பெரிய ஆலமரமாக வளர்ந்திருக்கும் பிரிவினை கிளர்ச்சியை எழவிடாது தடுப்பதற்காக உபயோகிக்கப் படும் பழையகோபுரம் ஆனால் ஐக்கியம் என்ற புதிய பூச்சுத் தான் இது.

இதிலே வேறொன்று குறிப்பாகச் சொல்ல வேண்டியி ருக்கிறது. ஐக்கிய இலங்கை, தேசிய இலங்கை என்று குறிப் பிட்டுக்காட்டும் போது இன்றைய இலங்கையிலும் முந்திய இலங்கையிலும் ஐக்கியம், தேசியம் என்ற பொருள்கள் இல்லை என்பதனை மறைமுகமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள்

இலங்கை ஒரு தேசிய இனத்தைக் கொண்டதல்ல. இத னால் இலங்கையில் வசிப்பவர்கள் வேறு சில தேசிய இனத் தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

இலங்கையில் வாழும் தமிழர் யாவரும் நடை, உடை, பாவனையில் சிங்களவரோடு வேறுபட்டவராகின்றனர்.

ஆகவே ஒரு தேசிய இனம், அதற்கென ஒரு தேசம் என இருபதாம் நூற்றாண்டு அரசியலில் முன்னேறிக் கொண்டு வரும் பொழுது ஒரு தேசிய இனத்தை அடக்கி அவர்கள்மீது ஒரு அரசியல் அமைப்பை வேறு ஒரு தேசிய இனம் திணிப்பது சர்வாதிகாரம். இது ஒரு பழைய கோபு ரத்தின் மீது பூசிய 'சர்வதேசியம், ஐக்கியம்' என்ற பூச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இதை மறைக்க முயலும் 'ஐக்கிய, தேசியம்' இலங்கைத் தலைவர்கள் தாங்கள் ஒரு பழைய கோபுரத்தின் மீது ஒரு கற்பனை ஐக்கியத்தைத் தான் பூச முடிந்தது பூச முடியும் என்பதனையும் மறந்து விடுகின்றனர்.

இனத்தால் மட்டுமல்லாமல், மொழியாலும் கூட தமிழருக்கும் சிங்களவருக்கும் இணைக்கப்பாலம் கூட போட முடியாத பிளவு நிலமை ஏற்பட்டிருக்கிறது என்பதனை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

வேறு என்ன? கலையா? கலாச்சார்ரமா? ஐக்கியத்தை உண்டுபடுத்த அதுவும் கிடையாது. பழக்க வழக்கங்களைப் பொறுத்த வரையிலும் இலங்கை பிரிந்த நிலையில்தான் காணப்படுகிறது:

வேற்றுமை அதிகம் இருக்கிறது என்று நாம் கேட்டால் அவர்கள் இருந்தால் என்ன? வேற்றுமையில் ஒற்றுமை தெரியவில்லையா?" என்று கூறுகின்றனர். இது எதற்கு ஒப்பானது என்றால் நாவினிலே வேப்பெண்ணையைத் தடவி விட்டு கசப்பினிலே இனிப்பு கலந்திருப்பது தெரியவில்லையா என்பது போன்ற மண்வெட்டி வேதாந்தத்திற்குத் தான்.

வடக்குக் கிழக்கு இலங்கையைச் சேர்ந்தவர்களும் மற்றைய இலங்கையைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமையாய் வாழ்கின்றனர் என்பது கசப்பிலே இனிப்பு இருப்பதுபோலத்தான் இருக்கிறது.

பல இனங்கள், பல மொழிகள், பல கலாச்சாரங்களை எல்லாம் ஒன்றுசேர்ந்து சாம்பார் ஆக்கவேண்டாம் ஐக்கிய தேசியவாதிகளே! ஐக்கிய இலங்கை வாதிகளே!!

ஐக்கிய இலங்கை காலவெள்ளத்தால் தகர்த்தெறியப் படும். ஆகவே அந்த வெள்ளம் வருமுன்னே "தமிழ் நாடு" என்ற அணை கட்டவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள், நாம் வேறு இனத்தினுல் நசுக்கப்பட்டு அடிமையாய் வாழாமல் சுதந்திரமாகவாழ உரிமைப்போர் புரிய அணிதிரளுங்கள்.

## 6

சிலர் சிறுநாடாக இருந்தால் சுதந்திரம் பேணப்படுமா? வாழமுடியுமா? அது ஒரு போதும் வாழ முடியாது சுதந்திரம் பேணப்படவும் மாட்டாது? பெரிய நாடாக இருந்தால்தான் பேணப்படும் என்கிருர்கள்.

நிச்சயம் சிறுநாடாக இருந்தால் வாழமுடியும் சுதந்திரமும் பேணப்படும். இதற்குச் [7]சான்றுகள் பலவுள. அவை இதோ,

| | | |
|---|---|---|
| அல்ஸ்டரர் | 13 | லட்சம் மக்கள் |
| அல்பேனியா | 10 | ,, ,, |
| நிகரகுவா | 10 | ,, ,, |
| பனுமா | 6 | ,, ,, |
| லக்சம்பார்க்க | 2½ | ,, ,, |
| லிக்டென்ஸ்டீன் | 10 | ஆயிரம் மக்கள் |

இப்படியான சிறு நாடுகள் சுதந்திரமாக வாழவில்லையா? மற்றும் மொஞகோ என்ற மத்தியதரைக் கடல் ஓரத்திலே கேவலம் ஒரு கீன்ரப் பாத்தி நாலு சதுரமைல் மாத்திரம் உள்ள இருபதாயிரம் மக்கள் வாழமுடியும். ஆனுல் இருபத்தைந்து லட்சம் தமிழர் வாழமுடியாதா?

உலகிலேயே நாடற்றவர்களாகிய யூதர்கள் 1948-ம் ஆண்டு அளவில் பாலஸ்தினத்திலே இஸ்ரேஸ் என்ற பாலேவனத்தைப் பெற்று செல்வம் கொழிக்கச் செய்கிருர்கள்; ஆனுல் நாடான்ற தமிழர்களுக்கு நாடோடியினும் தாழ்வான நிலேதான் இன்று.

---

7. விடுதலைக் கிளர்ச்சி என்ற நூலில் திரு. மு. க. எழுதி உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவோ வளம் கொண்ட தமிழ்ப் பகுதி தனித்து வாழ வேண்டும், வாழமுடியும்,

வேறுசிலர் கேட்கிறார்கள், ''தனித் தமிழ் நாடு வந்தால் பிரதம மந்திரியார்? வட மாகாணத்தான், கிழக்கு மாகாணத்தான் என்று பேதம்ஏற்பட்டு பிளவுஏற்படுமே இதற்கு என்ன செய்ய முடியும்'' என்றுதான், அவர்கள் கூறுவது போல ஒரு பிரச்சனை எழமாட்டாது, எழுந்தாலும் அதனை [8]கனவான் ஒப்பந்தப்படி சுலபமாகத் தீர்த்துவிடலாம்.

முடிவாக,

தமிழினம், தமிழ் மொழி, கலை, கலாச்சாரம் சீரழிந்து சிதறி அழியாமல் பாதுகாப்பதற்கும் தமிழர் தலைநிமிர்ந்து வாழவும் எமக்குத் "தமிழ் நாடு" வேண்டும்,

எழுங்கள்; எழுங்கள் அடிமைத்தனத்தைக் கிழித்தெறிய இன்றே ஒன்று சேர்ந்து எழுங்கள்.

வெற்றி சூழட்டும்!

தனித் தமிழ் நாடு வாழட்டும்!!

வாழ்க தமிழினம்:

| முற்றும். |

---

8. ஆரிய மொழிக் குடும்பத்தில் இரு பெரும் பிரிவுகள் உண்டு, ஒன்று ஆசிய ஆரிய மொழிக் குடும்பம், மற்றது ஐரோப்பிய ஆரிய மொழிக் குடும்பம். ஆசிய ஆரிய மொழிக் குடும்பத்தில் மூன்று பிரிவுகள் உண்டு; அவையாவன (1) பாரசீக(ஈரான்) மொழி, (2) அரமீனி மொழி, (3) வட மொழியை அடிப்படையாகக் கொண்ட இந்திய ஆரிய மொழிக் குடும்பம். இந்த வட மொழியை ஆதாரமாகக் கொண்ட பல மொழிகள் உண்டு. அவையாவன இந்தி. மராட்டி, சிங்களம், வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி முதலியன ஆதலால் சிங்களம் ஆரிய மாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org